


பயிற்சி ! முயற்சி !! வளர்ச்சி !!

# SALEM GOVT. I.T.I. ALUMNI ASSOCIATION

# சேலம் அ.தொ.ப. நிலைய முன்னாள் பயிற்சியாளர்கள் பேரவை

பதிவு எண். 18/2014

சேலம் - 636 007.

## 11-ஆம் ஆண்டு மகாசபைக் கூட்டம்

## ( 2023 - 2024 )

## ஆகஸ்ட் 11, 2024

## வேலை அறிக்கை

# SALEM GOVT. I.T.I. ALUMNI ASSOCIATION
# சேலம் அ.தொ.ப. நிலைய முன்னாள் பயிற்சியாளர்கள் பேரவை

பதிவு எண். 18/2014

சேலம் - 636 007.

அன்புடையீர், வணக்கம்.

நமது சேலம் அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்று இன்று நலமுடனும் வளமுடனும் வாழ்ந்து கொண்டிருக்கும் பெருவாரியான சகோதர / சகோதரிகளின் நீண்டநாள் கனவாக மனதில் புதைந்திருந்த, நாம் பயிற்சி பெற்ற சேலம் அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்திற்கு நம்மால் ஆன சிறுசிறு உதவிகளை செய்திட வேண்டும் என்ற கனவை நினைவாக்கிட உருவானதே **Salem Govt. I.T.I. Alumni Association** என்கிற அமைப்பாகும்.

**சங்கப் பதிவு :**

6-2-2014 அன்று முறைப்படி **Salem Govt. I.T.I. Alumni Association** என பதிவு செய்யப்பட்டது. (பதிவு எண். 18/2014, நாள் : 6-2-2014) முறையாக வருடந்தோறும் பொதுக்குழு கூட்டப்பட்டு, வரவு செலவு கணக்குகள் ஆண்டிற்கு ஒருமுறை தணிக்கை செய்யப்பட்டு, சிறப்பான முறையில் செயல்பட்டு வருகிறது.

**சங்கத்தின் நோக்கங்கள் :**

1. சேலம் Govt. I.T.I. யில் பயின்ற முன்னாள் பயிற்சியாளர்களை அடையாளம் கண்டு, அவர்களின் நலனுக்காகப் பாடுபடுதல்.
2. சேலம் Govt. I.T.I. யின் நிர்வாக அனுமதியுடன், சேலம் Govt. I.T.I. யில் பயின்று வரும் பயிற்சியாளர்களுக்கு, தொழிற்கல்வித் துறையில் சிறந்து விளங்கும் கல்வியாளர்களைக் கொண்டு இலவச சிறப்பு பயிற்சி அளித்தல்.
3. உடல் நலன் பேணுதல், உடற்பயிற்சி, விளையாட்டு குறித்த தகவல்களை அனைவருக்கும் கிடைக்க வழிவகை செய்தல்.
4. அரசால் நடத்தப்படும் வேலைவாய்ப்புக்கான போட்டித் தேர்வுகள் குறித்த விழிப்புணர்வை பயிற்சியாளர்களிடையே ஏற்படுத்துதல். மேற்படி தேர்வுகளில் கலந்துகொள்வதற்கான பயிற்சியை இலவசமாக அளித்தல்.
5. தொழிற்துறையில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள் மற்றும் முன்னேற்றம் குறித்த தகவல் அடங்கிய புத்தகம் வெளியிடுதல், துண்டுப்பிரசுரம் விநியோகம் செய்தல் மற்றும் பிற உரிய ஊடகங்கள் மூலம் சங்க உறுப்பினர் மற்றும் பயிற்சியாளர்களுக்கு கொண்டு செல்தல்.
6. அகில இந்திய தொழிற் தேர்வில் அனைத்து மட்டத்திலும் அதிக மதிப்பெண் பெற்று தேர்ச்சி பெற பயிற்சியாளர்களுக்கு ஆலோசனை வழங்குதல் மற்றும் மாதிரி தேர்வு நடத்தி பயிற்சி அளித்தல்.
7. சேலம் Govt. I.T.I. -க்கும், பெற்றோர்களுக்கும் இடையே ஒரு பாலமாக இருந்து நட்புறவை வளர்த்தல்.
8. தொழிற்சாலைகளை அணுகி, இறுதியாண்டு பயிற்சியாளர்களுக்கு Campus Interview மூலம் Apprentice Training மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்கிடத் தேவையான பணிகளை மேற்கொள்ளுதல்.
9. அனைத்துவகையான தொழில் வளர்ச்சி குறித்த அறிவை பயிற்சியாளர்களுக்கு கொண்டு செல்லும் விதமாக சேலம் Govt. I.T.I. நிர்வாகத்துடன் இணைந்து பயிற்சியாளர்களை Industrial Visit-க்கு அழைத்துச் செல்லுதல்.
10. ஆதரவற்ற பயிற்சியாளர்களின் பயிற்சிக்கு இயன்ற வரை உதவுதல்.
11. அரசின் அனுமதி மற்றும் மக்களின் ஒத்துழைப்போடு எங்கும் தூய்மை, எங்கும் பசுமையை உருவாக்க முழு முயற்சி மேற்கொள்தல்.
12. அரசியல் சார்பற்றும் மற்றும் அரசியல் நோக்கமற்றும் செயல்படுவது.

## -: நிர்வாகத்தின் செயல்பாடுகள் (Diary) :-

**01-04-2023** முதல் **31-03-2024** வரை

### 02-04-2023

நமது Alumni Association சார்பாக தலைவர் திரு. K. துரைராஜ் அவர்களின் தலைமையில் திரு. ராஜேந்திரன் M.L.A., (வடக்கு சட்டமன்ற தொகுதி) அவர்களை சந்தித்து, ஐ.டி.ஐ.க்குத் தேவையான நலத்திட்ட உதவிகளை செய்து தர வேண்டுமாய் கோரிக்கை மனு கொடுக்கப்பட்டது.

இந்நிகழ்வில், திரு. K. சண்முகம், திரு. O.M. செந்தில்குமார், திரு. J. ஜெய்சங்கர் ஆகியோர் உடன் கலந்து கொண்டனர்.

### 3-04-2023

Salem Govt. ITI-யில் நடைபெற்ற நாட்டு நலத்திட்ட முகாமில் சிறப்பு அழைப்பாளர்களாக கௌரவத் தலைவர் திரு. M. திருநாவுக்கரசு, திரு. O.M. செந்தில்குமார், ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### 4-04-2023

Salem Govt. ITI-யில் நடைபெற்ற நாட்டு நலத்திட்ட முகாமின் நிறைவு விழாவில் சிறப்பு அழைப்பாளர்களாக கௌரவத் தலைவர் திரு. M. திருநாவுக்கரசு, திரு. J. ஜெய்சங்கர் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். பயிற்சியாளர்களின் உணவு செலவிற்காக நமது பேரவையின் சார்பாக ரூ. 5000/- வழங்கப்பட்டது.

### 25-06-2023

நிர்வாக்குழு கூட்டம் தலைவர் திரு. K. துரைராஜ் அவர்களின் தலைமையில் சேலம் இரும்பாலை வளாகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் திரு. K. சண்முகம், திரு. O.M. செந்தில்குமார், திரு. M. திருநாவுக்கரசு, திரு. J. ஜெய்சங்கர், திரு. T. ஆனந்த், திரு. G. பார்த்திபன், திரு. M. மாணிக்கம், திரு. K. ராமகிருஷ்ணன், திரு. K. பழனிசாமி, திரு. N. சரவணன் ஆகியோர் கலந்து கொண்டு, வெப்சைட் வடிவமைப்பு குறித்து ஆலோசனை தெரிவித்தனர்.

### 28-06-2023

Salem Govt. I.T.I. க்கு IMC Chairman நியமனம் சம்மந்தமாக, திரு. வெங்கடாஜலபதி G.M. SSPஅவர்களை சந்தித்து, IMC Chairman ஆக பொறுப்பேற்கும்படி வேண்டுகோள் வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் தலைவர் திரு. K. துரைராஜ், திரு. M. திருநாவுக்கரசு, திரு. T. ஆனந்த், திரு. K. சண்முகம், திரு. O.M. செந்தில்குமார், திரு. J. ஜெய்சங்கர் ஆகியோர் பங்கேற்றனர்.

### 25-08-2023

நிர்வாக்குழு கூட்டம் தலைவர் திரு. K. துரைராஜ் அவர்களின் தலைமையில் சேலம் இரும்பாலை வளாகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் I.T.I.-ல் பயிற்சி பெறும் ஆதரவற்ற பயிற்சியாளர்களுக்குத் தேவையான அடிப்படை உதவிகள் செய்திட முடிவு செய்யப்பட்டது. இந்நிகழ்வில் திரு. K. சண்முகம், திரு. O.M. செந்தில்குமார், திரு. M. திருநாவுக்கரசு, திரு. J. ஜெய்சங்கர், திரு. T. ஆனந்த், திரு. G. பார்த்திபன், திரு. M. மாணிக்கம், திரு. K. ராமகிருஷ்ணன், திரு. K. பழனிசாமி, திரு. N. சரவணன், க. பார்த்தசாரதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

### 10-09-2023

நிர்வாகக்குழு மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் I.T.I. வளாகத்தில் தலைவர் திரு. K. துரைராஜ் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இதில் 8-10-2023 அன்று பொதுக் குழு கூட்டம் நடத்த ஏகமனதாக முடிவு செய்யப்பட்டது.

### 20-09-2023

IMC Charman திரு. ஸ்ரீதர் Titan அவர்கள் தனது பொறுப்பில் இருந்து விடைபெற்ற நிறைவு விழா I.T.I. வளாகத்தில் நடைபெற்றது. இதில் IMC Charman திரு. ஸ்ரீதர் Titan அவர்களுக்கும் மற்றும் திரு. வைரவேல் அவர்களுக்கும் நமது பேரவையின் சார்பாக அவர்களது சேவையை நினைவு கூர்ந்து கௌரவிக்கும் பொருட்டு இருவருக்கும் பொன்னாடை போர்த்தி நினைவு பரிசு வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் இந்நிகழ்வில் நமது பேரவையின் பொதுச்செயலாளர் திரு. K. சண்முகம், கௌரவத் தலைவர் திரு. M. திருநாவுக்கரசு, திரு. ஸ்ரீபதி, திரு. M.P. சுப்ரமணி, திரு. ரங்கராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### 22-09-2023

நமது பேரவையின் முயற்சியால் Salem Govt. I.T.I. -ன் புதிய IMC Charman திரு. R. வெங்கடாஜலபதி GM.

SSP, அவர்களின் நியமன ஆணை அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் I.T.I. சார்பாக திரு. K. கிருஷ்ணகுமார், T.O., (பொறுப்பு), தலைவர் திரு. K. துரைராஜ், பொதுச்செயலாளர் திரு. K. சண்முகம், திரு. O.M. செந்தில்குமார், திரு. R. ராமலிங்கம், திரு. T. ஆனந்த் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நமது பேரவையின் முயற்சியால் திரு. S. சங்கரன் அவர்களின் வழிகாட்டுதல்படி, I.T.I. வளாகத்தில் 2000 சதுரடி பரப்பளவில், தோட்டக்கலைத்துறை மூலம் விடுதி மாணவர்களின் நலனுக்காக தோட்டம் அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டு, த.நா.அரசு தோட்டக்கலைத்துறையைச் சேர்ந்த திரு. சேகர் அவர்கள் நேரில் கள ஆய்வு செய்து தோட்டம் அமைக்க ஒப்புதல் வழங்கினார்.

## 25-09-2023

2023 ஆம் ஆண்டு பயிற்சியில் சேர்ந்த, புதிய பயிற்சியாளர்களுக்கான முதல்நாள் Orientation Program- ல் IMC Chairman திரு. R. வெங்கடாஜலபதி GM, SSP அவர்களுடன் தலைவர் திரு. K. துரைராஜ், திரு. K. சண்முகம், திரு. M. திருநாவுக்கரசு, திரு. T. ஆனந்த், திரு. J. ஜெய்சங்கர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## 27-09-2023

3-ஆம் நாள் Orientation Program- ல் நமது பேரவையின் உறுப்பினர்கள் திரு. பாலா, (தொழிலதிபர்), திரு. வெங்கடேசன், Atomic, Chennai, திரு. K. சண்முகம், திரு. M. திருநாவுக்கரசு ஆகியோர் கலந்து கொண்டனர்.

## 8-10-2023

10-வது ஆண்டு மகாசபைக்கூட்டம் தலைவர் திரு. K. துரைராஜ் அவர்களின் தலைமையில் சேலம் அ.தொ.ப.நிலைய வளாகத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது. இக்கூட்டத்தில் OB, EC. மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டு, தங்களது கருத்துக்களை பகிர்ந்து கொண்டு சிறப்பித்தனர்.

## 12-10-2023

அ.தொ.ப.நிலையத்தில் 7-ஆம் ஆண்டு பட்டமளிப்பு விழா சிறப்புற நடைபெற்றது. இந்நிகழ்வில் நமது பேரவையின் சார்பாக அகில இந்திய அளவில் முதலிடம் பிடித்த பயிற்சியாளர்களுக்கும் மற்றும் தொழிற்பிரிவு வாரியாக முதல் 3 பயிற்சியாளர்களுக்கும் பாராட்டி நினைவுப் பரிசு வழங்கப்பட்டது.

இந்த விழாவில் திரு. M. ரவிச்சந்திரன், DD அவர்களின் தலைமையில் சிறப்பு விருந்தினர்களாக Dr. P. அலர்மேல் மங்கை IAS அவர்கள், கூடுதல் ஆட்சியாளர், சேலம், திரு. R. வெங்கடாஜலபதி, GM, SSP, IMC Chairman, நமது பேரவைத் தலைவர் திரு. K. துரைராஜ், திரு. K. சண்முகம், திரு. M. திருநாவுக்கரசு, திரு. M.P. சுப்பிரமணி, திரு. ரங்கராஜ், திரு. ஸ்ரீபதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

## 20-10-2023

திருமயம் பெல் நிறுவனத்தில் பணியாற்றும் நமது பேரவையின் உறுப்பினர்கள் சார்பாக LCD Projector ஒன்று, நமது சேலம் அ.தொ.ப.நிலையத்திற்கு நன்கொடையாக வழங்கப்பட்டது.

பொதுச்செயலாளர் திரு. K. சண்முகம் முன்னிலையில், திரு. முத்துக்குமாரசாமி (BHEL , திருமயம்) அவர்கள் வழங்க, அதனை நமது சேலம் அ.தொ.ப.நிலைய துணை இயக்குநர் / முதல்வர் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

## 30-10-2023

நமது பேரவையின் கௌரவத் தலைவர் திரு. M. திருநாவுக்கரசு, A.T.O. அவர்களின் பணி நிறைவு பாராட்டு விழா நடைபெற்றது. இந்நிகழ்வில் நமது பேரவையின் தலைவர் திரு. K. துரைராஜ், திரு. சக்திவேல், திரு. மாணிக்கம், திரு. பார்த்திபன், திரு. O.M. செந்தில்குமார், திரு. K. சண்முகம் ஆகியோர் கலந்து கொண்டு, அவருக்கு பொன்னாடை போர்த்தி, நினைவு பரிசு வழங்கப்பட்டது.

## 7-11-2023

IMC Chairman திரு. R. வெங்கடாஜலபதி GM, SSP அவர்களின் தலைமையில் IMC கூட்டம் நடைபெற்றது. இதில் நமது பேரவை சார்பாக தலைவர் திரு. K. துரைராஜ் அவர்கள் கலந்து கொண்டு ஆலோசனை வழங்கினார்.

## 4-12-2023

நமது பேரவையின் நிர்வாகி திருமயம் பெல். திரு. முத்துக்குமாரசாமி மற்றும் அவரது மனைவி இருவரும், நமது I.T.I. பயிற்சியாளர்களுக்கு (Guest Lecture) சிறப்பு பயிற்சி வகுப்பு எடுத்தனர். அவர்களுக்கு பேரவையின் சார்பாக பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டது.

**8-12-2023**

நமது I.T.I. வளாகம் முழுவதும் பயன்படுத்தும் பொருட்டு நமது IMC Chairman அவர்களிடம் முன் வைத்த கோரிக்கையின் அடிப்படையில் சேலம் உருக்காலை சார்பாக 15 பேரல்கள் (குப்பைத் தொட்டி பயன்பாட்டிற்காக) பெறப்பட்டு பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டன. இதனை திரு. K. சண்முகம், திரு. சேட்டு ஆகியோர் முன்னின்று செய்து கொடுத்தனர்.

**4-1-2024**

நமது பேரவையின் சங்கப் பதிவு புதுப்பித்தல் பணி பொதுச்செயலாளர் திரு. K. சண்முகம் அவர்களால் செய்து முடிக்கப்பட்டது.

**5-1-2024**

நமது I.T.I. வளாகத்தில் நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாடு குறித்த பயிற்சியாளர்களுக்கான கருத்தரங்கில், "தொழில் முனைவோர் ஆவது எப்படி?" என்ற தலைப்பில் நமது பேரவையின் உறுப்பினர், திரு. N. ஜெயவேலு (MMV) JA டிரேடர்ஸ், நாமக்கல், அவர்கள் கலந்து கொண்டு பயிற்சியாளர்களுக்கு சிறப்புரையாற்றினார். அவருக்கு நமது I.T.I. துணை இயக்குநர் / முதல்வர், நமது பேரவையின் பொதுச்செயலாளர் ஆகியோர் பொன்னாடை போர்த்தி கௌரவித்தனர்.

**24-2-2024**

சேலம் இரும்பாலை வளாகத்தில், தலைவர் திரு. K. துரைராஜ் அவர்களின் தலைமையில் நிர்வாகக்குழு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஆதரவற்ற பயிற்சியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்க முடிவு செய்யப்பட்டது. இந்தக் கூட்டத்தில் திரு. K. சண்முகம், திரு. O.M. செந்தில்குமார், திரு. J. ஜெய்சங்கர், திரு. T. ஆனந்த், திரு. K. பழனிசாமி, க. பார்த்தசாரதி, திரு. K. செங்கா கவுண்டன், திரு. K. ராமலிங்கம், திரு. சீனிவாசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**12-3-2024**

மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகள், சேலம் அ.தொ.ப.நிலையத்தின் முன்னெடுப்பில், சேலம் காந்தி மைதானத்தில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு நமது பேரவையின் சார்பாக உணவு தயாரிக்க ரூ. 8,800/- மதிப்பில் 6 அரிசி சிப்பங்கள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையர், மண்டல இணை இயக்குநர், துணை இயக்குநர் / முதல்வர் மற்றும் நமது பேரவையின் சார்பாக தலைவர், பொதுச்செயலாளர், பொருளாளர் மற்றும் சில நிர்வாகிகளும் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்தி, நமது பேரவையின் செயல்பாடுகள் குறித்த திட்ட அறிக்கைகள் அடங்கிய தொகுப்பை "வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையர்" அவர்களிடம் கொடுத்து, அவரை நேரில் சந்திக்க நேரம் ஒதுக்கித் தரும்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

**15-3-2024**

நமது சேலம் அ.தொ.ப.நிலைய வளாகத்தில், துணை இயக்குனர் / முதல்வர் அவர்களது தலைமையில் நமது பேரவையின் சார்பாக ஆதரவற்ற பயிற்சியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக மதிப்பிற்குரிய சேலம் மாநகராட்சி மேயர் திரு. ராமச்சந்திரன் அவர்கள், IMC Chairman திரு. R. வெங்கடாஜலபதி GM, SSP அவர்கள், திரு. T. ஆனந்த், கௌரவத் தலைவர் திரு. M. திருநாவுக்கரசு, தலைவர் திரு. K. துரைராஜ், பொதுச்செயலாளர் திரு. K. சண்முகம், பொருளாளர் திரு. J. ஜெய்சங்கர், திரு. M. மாணிக்கம், திரு. M.P. சுப்ரமணி, திரு. சேட்டு, திரு. S. நடராஜன், திரு. ஸ்ரீபதி, திரு. சண்முகவடிவேல் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

உறுப்பினர்களின் பேராதரவோடு,





(**K. சண்முகம்,** A.T.O. Govt. I.T.I.,)
பொதுச்செயலாளர்,
Salem Govt. I.T.I., Alumni Association, Salem-7.

*Hearty wishes to*

# SALEM GOVT. I.T.I. ALUMNI ASSOCIATION'S

## 11TH ANNUAL GENERAL BODY MEETING!

நாமாக முயற்சித்தோம்... தானாக நடந்தேறியது...
தனியாக யோசித்தால்... தடம் எங்கே போவது? – நாம்
கொண்ட கொள்கை மறவாமல், ஒத்தக் கருத்துடன்

தொண்டாற்ற வந்தோம், நம்மிடையே திண்டாட்டம் எதற்கு?
கொண்டாட வேண்டிய பொன்னான வெற்றிகள் போதுமா நமக்கு?

இன்னும் சாதிக்கவேண்டிய களங்களாயிரம் சரம்சரமா இருக்கு!
இதில் தலைக்கணம் நமக்கெதற்கு?

பெருமை என்றும் தனிநபருக்கில்லை
நம் பேரவை என்றும் பேணிட வேண்டும்
பெரும் பாரம் நமக்கில்லை!

நாம் இருந்தாலும் – போனாலும் நலமோடு பயணிக்கும்
நம் பேரவை வாழ்க, வாழ்கவே!

– ஜெ. ஜெய்சங்கர்



- Logo Creation
- Designing
- Wedding Cards
- Office Stationary
- Advertisement
- Greeting Cards
- Envelops
- Stickers
- Calendars
- Offset Printing
- Screen Printing

**JD Créativé**
UNIQUE & UNSUAL

Unique & unusual...



Thank You!
We proudly thanks to you for referred us to your friends & relatives!

PROUD BNI MEMBER



26/261-B,
Advaitha Ashramam Road,
Opp. to New Bus Stand,
Salem - 636 004.

G-pay : 9362 9367 26
jdcreativebni@gmail.com
www.jdcreative.in

JD @ JAISHANKAR J
Cell : 9362 9367 26